


**GajalakshmiParamasivam**
Vairavar-Kali Kovil; Sangarathai-Thunaivi; Sri Lanka
906/ 56, Carr Street; Coogee N.S.W. 2034; Australia
Email gajalakshmi_param@bigpond.com
Phone 61 2 9315 7417; 94 21 3201020 ; 94 771117607


திரு ஏ சோதிநாதன்
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
வலிகாமம் மேற்கு
சங்கானை

25 March 2013

Your Ref: VW/RD/THUNAVI/WRDS/01

திரு சோதிநாதன அறிவது,

**மதில், படலை/பாதைப் பிரச்சனைகள்**

நாம் சுற்று மதில் கட்டுவதையிட்டு உங்கள் அலுவலகம் மீண்டும் மீண்டும் பிரதேச சபை மூலம் உத்தியோகஸ்தர்களை அனுப்பியது. சட்டபூர்வமாக அங்கு யாருக்கு என்ன அதிகாரமுள்ளது என எனக்குத்தெரியாது. நீங்களும் அறிவிக்கவில்லை. சிலவற்றை அறிவுமூலம் கணிக்கக் கூடியதாக உள்ளது. மிகுதியை உங்களது தேவை அல்லது விருப்பம் என எடுத்துக்கொள்கிறேன்.

எனக்கு கிடைத்த தகவல்கள்படி உங்கள் முறைப்பாடு நான் பொதுக்கட்டிடப்பக்கம் போட்ட மதிலில் Gate போட்டதும், அந்தப்பக்க மதில் உயரம் கூடிப் போயிற்று என்பதுமே. மற்றவை தன்னம்பிக்கை இல்லாத அதிகாரிகளின் சிறுபிள்ளைத்தனம் என்பதே எனது கணிப்பு. அதை சரிப்படுத்துவது எனது பொறுப்பாக நான் நினைக்கவில்லை. தனிப்பட்ட விதத்தில் யோசிக்காமல் பொது விதிமுறைப்படி கணித்தால் எல்லோருக்கும் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை. அதுவே எனது வழியும்.

இப்படி கணிக்க - ஓரிடத்தில் பொது விதி அந்த நேரத்தில் அந்த இடத்திற்கு பொதுப் பலனளிக்கும் வகையில் நிர்வாகிக்க இல்லை என்றால், இயலுமான அளவிற்கு நீதியாக சட்டபூர்வமாக நிர்வாகித்துவிட்டு மிகுதிக்கு அந்த இடத்தில் பொதுநலனுக்காக அதிகூடிய பங்களிப்பு செய்தவரது உண்மையை சேர்த்து முழுவதையும் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுத்தால் அது சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் நன்மை பயக்கும்.
நான் அங்கு கோயிலைப்பராமரிக்க வந்தபோது திருமதி சரோஜா மருதலிங்கம் என்னிடம் பொது நலனுக்காக பாதைவிட்டுத்தர கேட்டபோது அவவுக்கு அது சம்பந்தப்பட்ட சட்டங்கள் தெரியுமா அதன்படிதான் அங்கு அலுவல்கள் நடக்கின்றனவா என்றெல்லாம் நான் கணிக்கவில்லை. எமது குடும்பத்திற்கு அந்த கோயில்மூலம் அவ்விடத்தில் இருந்த நம்பிக்கை மூலம் மட்டுமே முடிவு எடுத்தேன்:. இப்பொழுது நடப்பவற்றை வைத்து பார்க்கும்போது நான் வைத்த அளவு நம்பிக்கை அங்கிருக்கும் கேட்டவர்களுக்கும் நன்கொடை பெற்றவர்களுக்கும்

இல்லை என்று தெரிகிறது. அதைப்பற்றி பரவாயில்லை. இருப்பதுபோல் நடித்தால் கணிக்க வேண்டிய தேவை தெரியாது – மறைக்கப்படும்.

உங்கள் அலுவலகத்தின் முறைப்பாட்டின்படி உங்கள் சட்டம் என்ன சொல்கிறது எனத் தெரியவில்லை. உங்கள் நடவடிக்கைகளை சட்டபூர்வமானவை என எடுத்து கணித்தால் விளைவுகளிலிருந்து தொடங்கி பின் நோக்கி சென்று உங்கள் சட்டம் என்ன சொல்கிறது எனக்கணிக்கலாம். அதன்படி நன்கொடை செய்த எமக்கு பாதை இல்லை. நன்கொடை கேட்ட மக்களுக்கும் பாதை இல்லை. உங்களுக்கு மட்டுமே பாதை உண்டு. இதைக் காட்டவே முதலில் நீங்கள் வேலி போட்டபோது நாமும் போட்டு காட்டினோம். ஒரு பாதை தண்ணீர் எடுக்க வருபவர்களுக்கு விட்டோம். அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதபோது நாம் மேற்கூறியவாறு சட்டத்தை எமது மூளைப்படி கணித்து உண்மையையும் சேர்த்து Gate அமைத்தோம். அப்போது அங்கிருந்த ஒருவரும் – உங்கள் உத்தியோகத்தர்கள் உட்பட ஒரு சரி-பிழைகளும் சொல்லவில்லை. பின் சுற்று மதில்போட Plan அனுப்பியபோது எமது Coordinator தமது பிரதேச சபையில் தனதறிவிற்காக கேட்டு பாதை நடுவிலிருந்து 10' தூரம் விட வேண்டும் என்றார். அப்பவே கேட்டேன் அப்ப ஏன் Gate ற்கும் அப்படி விடவில்லை என்று. தவறு நடந்துவிட்டது என்றார். மதில் தொடங்கும் இடத்தலிருக்கும் Gate ஐ பின்னுக்கு எடுக்கும்படி சொன்னேன். அங்கு ஒவ்வொன்றிற்கும் நான் இலங்கையிலோ இங்கே Australia விலோ தெரிந்த பொது விதி முறைப்படியே நடந்தேன் – வேறுமாதிரி என்று சட்டம் சொல்கிறது என்று அறிந்தால் ஒழிய. அதன்படித்தான் கோயில் மண்டபம், தங்கும் வீடு, கடைசியாக சுற்றுமதில் இவற்றிற்கு Plan போட்டோம். Plan எமது மகன் - Pradeepkumar Paramasivam - கீறியவர் Civil Engineer ரும் Architect உம். எமது மருமகன் David Springford உம் அவ்வாறே. அவரும் மேலோட்டமாக பார்த்தார். அந்த திறமைகளையும் அடிப்படை Standards ஐயும் முறைகளையும்தான் நாம் அங்கு அந்த Plans மூலம் கொண்டுவந்துள்ளோம். Australia காசு நல்லம் மனிதவளமும் Standards உம் நல்லதில்லை எனகிறமாதிரி உங்கள் அலுவலகத்தால் உந்தப்பட்ட பிரதேச சபை நடந்துள்ளது. அதாவது நீங்கள் நடந்துள்ளீர்கள் அதற்கு அவர்கள் தூதுவர். இலங்கை Chief Justice விஷயத்தில் அரசாங்கம் இந்த Sepration of Powers என்ற பொது விதியைப்பாவிக்காததால் உயர்ந்த அறிவு பாவிக்கும் இடங்களில் பல கேள்விகள் எழுந்துள்ளன. இவ்விஷயத்திலும் அதே பலவீனம் தெரிகிறது.

நாம் மூன்று தளங்களில் முடிவு எடுக்கிறோம்:

(1) **புலன்களால்** எண்ணி - அதுவே பெரும்பான்மை வாக்கின் (Majority Vote) மூலம் முடிவு செய்யும் வழி. . துணைவி மாதிரி கிராமங்களில் பெரும்பாலும் இந்த முறையே பாவிக்கப்படுகிறது. இதுவே கேள்வி அறிவின் (hear say) வழியும். பொது நம்பிக்கை இல்லாவிட்டால் இவ்வழி பிரிவைக் கொண்டுவரும். ஆகவே நீதி ஸ்தலங்களில், பொது நிர்வாகத்தில் (Public Administration) கேள்வி அறிவு வைத்து முடிவு செய்வது ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்று. படிப்பறிவு குறைந்த இடங்களில் நம்பிக்கையின் அடிப்படையில் பாவித்தால் நிச்சயம் உள்ளூர் ஆட்ச்சி சுமுகமாகவும் தர்மமாகவும் நடக்கும். இதுதான் பிரதேச சபையின் முதல் கருவியாக இருந்திருக்க வேண்டும். அதற்கு அவர்கள் துணைவியை சார்ந்தவர்கள் அல்லவே. சிங்களவர் தமிழர் பகுதியில் ஆட்ச்சி நடத்துவது பிழை என்று கூறுபவர்கள் இந்த நம்பிக்கை அடிப்படையில் தான் கூறமுடியம். அது பிழை என்றால் சாதியால் பரம்பரையாக வட்டுக்கோட்டைமாதிரி இடங்களில் குடியிருந்தவர்கள் துணைவியிலும் எமது கோயில் மூலம் மாதிரி பொது நம்பிக்கை செயல்கள் இல்லாமல் அதிகாரம் செலுத்த

வந்தால் அங்கு பிரச்சகைளே வளரும். உங்கள் அதிகாரிகள் அங்கு பொதுக்கட்டிடத்தில் office அமைக்காததற்கு இது ஒரு பெரும் காரணம் என்பது எமதும் கணிப்பு.

(2) **பகுத்தறிவு** மூலம் (Discriminative Thinking) சரி-பிழை போட்டு கணிப்பது. இதற்கு பொது சட்டமும் விதிமுறைகளும் தேவை. நீங்கள் சட்டம் படிப்பதாக எனது நண்பர் Sam Hensman கூறினார். அந்த அறிவு இந்த வழிக்கு உதவும். தற்போது உங்கள் புத்தகங்களில் உள்ள பல சட்டங்கள் துணைவி போன்ற பின் தங்கிய கிராமங்களது அமைப்புகள் பிழை என்று சொல்லும். ஆகவே அவை மூலம் நேராக அளந்து சொல்லப்படும் முடிவுகள் அதர்மமானவைகளாக இருக்கும் வீதம் கூடுதலாக இருக்கும். அதனால்தான் உங்கள் உத்தியோகத்தர் படலைகள் ஏற்கனவே இருப்பவர்களை அவற்றை அகற்றும்படி கூறவில்லை. அதேபோல் கிணற்றிற்கு 40 அடிக்கு குறைவான தூரத்திலிருக்கும் Toilet களை இடிக்க சொல்லவில்லை. எமது கிணறு குடி நீர் கிணறாக இல்லாமலிருந்தும் 40 அடி விதிமுறை அறிந்ததும் மேலதிக செலவில் நாம் எமது Toilet Pit ஐ மாற்றி அமைத்தோம். அதேபோல தேவையில்லாமல் பாதையிலிருந்து மேலும் 2 ½ அடி உள்ளுக்குள் சுற்று மதிலைக்கட்டினோம். அங்கு வசிக்காத பிரதேச சபை அதிகாரியின் வார்த்தையை நம்பியதால். நீங்களோ அவர்கள் மூலம் எங்களை விரட்டப்பார்க்கிறீர்கள். விதி முறைப்படி தாக்குப்படும் எவரும் தாக்குபவரிடம சட்டம் என்னவென்று உரைத்து பிழை கண்டுபிடிப்பதும் ஜனனாயக வழிமுறை. அதற்கு நடவெடிக்கை எடுக்க எமக்கு உரிமை இல்லாமலிருக்கலாம். ஆனால் தாக்கியவருக்கு தாக்குப் பட்டவர் பொது விதிப்படி சரி பிழை சொல்ல அதிகாரம் உண்டு. பிரதேச சபையில் உங்கள் செயலகம் பொதுக்கட்டிட Plan பதியவில்லை ; நீங்கள் பெற்றுக்கொண்ட நன்கொடைக்காணியை பதியவுமில்லை. அவர்களைப் பொறுத்தவரையில் உங்களுக்கு அந்த வளவு நன்கொடை செய்யப்படவில்லை. கேள்வி அறிவு மூலமே அது உங்களுடையது என்கிறார்கள். உங்கள் உத்தியோகத்தரும் அங்கு வசிக்கவில்லை. வசிப்போம் என்று கூறி ஏமாற்றி காணி எடுத்தீர்கள் என்பதே நாமறிந்த உங்கள் நடைமுறை. நாம் நன்கொடை எந்த அடிப்படையில் கொடுத்தோமோ அது நிறைவேற்றப்படாவிட்டால் அந்த நன்கொடை சட்டப்படி செல்லாது. முழுவதும் சட்டப்படி எமது காணியே. உங்களுக்கு பொது மக்களது பணத்தில் வேலி போட அதிகாரமுமில்லை. நாம் எமது காணிக்குள் Gate போட எமக்கு சட்டத்தின் அதிகாரம் உண்டு – ஏனென்றால் நீங்கள் நன்கொடை விதிமுறைப்படி நடக்காமல் நன்கொடையை திருப்பி தந்து விட்டீர்கள். நீங்கள்தான் ஒவ்வொருமுறைம் அனுமதியில்லாமல் எங்கள் காணியில் நுழைந்து உண்மையிலேயே சட்டவிரோதமாக நடக்கிறீர்கள். சட்டப்பாஷையில் ‘ Your officers are Trespassing’.

(3) **உண்மைப்படி** – முற்றான உண்மைப்படி. இதன்படித்தான் Trespass குற்றச்சாட்டு சொன்னேன். இந்த உண்மையை இரண்டுவிதங்களில் தெரிந்து கொள்ளலாம். உண்மைக்கு உருவம் கொடுத்தால் அதை சரி சமமாக பகிர்ந்தால் (நான் ஒரு பக்கம் நீங்கள் மறு பக்கமாக) ஒருவர் கொடுப்பார்; மற்றவர் பெறுவார். நாம் 16 February 2013 அன்று Jaffna College இல் நடத்திய seminar வில், வட்டுக்கோட்டையை சார்ந்த முன்னாள் அரசாங்க அதிகாரி திருமதி ராணி ரட்னதேவி கார்த்திகேசன் சின்னத்தம்பி அவர்கள் மிக அழகாக இதைக் கூறினார் - பெறுனரும் வழங்குனரும் வெவ்வேறான எதிர்பார்ப்புகளை வைத்திருப்பதால் வரும் பிரச்சனைகளென்று. உங்களுக்கும் எனக்கும் அவ்வாறே.

உண்மையான தேவை துணைவி மக்களுக்கு இருந்திருந்தால் அல்லது காணி கேட்ட அவர்களது நம்பிக்கைப்படி நடக்க வசதிப்படுத்தியிருந்தால் இந்தப்பிரச்சனை வந்திருக்காது. அவர்களது அனுபவப்படி அது இன்றும் எமது காணி. சட்டப்படி நீங்கள் நடக்க மட்டும் உண்மையான சட்ட நீதிப்படி அது எமது காணி.

சட்டம் படிக்கும் உங்களுக்கு தேசவழமைப்படி முதுசம் /சீதனம், தேடிய தேட்டம் என்று சொத்துக்கள் வகையறுக்கப்படுவது தெரிந்திருக்கும். அதை விளக்க தமிழ் இந்துக்களுக்கு முருகப் பெருமானின் மாம்பழக்கதை உண்டு. மூத்த பிள்ளையான பிள்ளையார் வேதப்படி தாய் தந்தையே உலகமென்று வலம் வந்து பரிசு மாம்பழத்தை பெற்றார். அது உள்ளுர் ஆட்ச்சி - நல்ல பிதேச சபையினது போல. இளையவர் முருகன் மயிலேறி உலகத்தை நேரில் சுற்றிவந்து ஆறு முகங்களால் 360 பாகை அவதானம் கொண்டு எல்லாருக்கும் தெரியும் வகையில் வென்றவர். பெற்றாரின் பரிசு மூத்தவருக்கு போனதால் தாமே தனது இராட்ச்சியத்தை அமைத்தவர். குன்றின்மேலிருந்து ஆறு முகங்களால் 360 Degree அவதானம் கொண்டு ஆட்சி செய்கிறார். அதை இப்போது உலகளவில் Transparency என்று கூறுகிறார்கள். உலகெங்கும் பரந்து வாழும் தமிழருக்கு இது மிக உகந்த வழி. பிற நாட்டவரது வளஙகளை பெறுபவருக்கும் இது தேவையான மார்க்கம். பல சாதியினர் / மதத்தினர் ஓரிடத்தில் வாழும் சமூதாயங்களுக்கு இவ்வழி அவசியம். உங்கள் அலுவலகத்தினர் துணைவியில் சம நீதியாக நிர்வாகம் / முகாமைத்துவம் செய்ய இவ்வழி தேவை. தற்போது அவர்கள் பிள்ளையார் வழியை முருகனின் இடத்தில் புகுத்தப்பார்க்கிறார்கள். துணைவி நாம் Plane என்ற மயிலில் வந்து முருகனின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்ட இடம். நல்லூர்மாதிரி ஆட்ச்சிக்குரியது. வட்டுக்கோட்டை சங்கானை பெரும்பான்மை மக்கள் சாதியில் மூத்தவர்கள். துணைவி பெரும்பான்மை மக்கள் சாதியில் இளையவர்கள். துணைவிக்கு வரும்போது Transparent ஆக எல்லாப்பக்கமும் தெரியுமாறு வந்து ஆறு கோணங்களிலும் நின்று முழுமையாக நடந்ததை அவதானித்து அந்த அவதானங்கள் மூலம் முடிவு எடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். சரி பிழை தெரியாவிட்டால் சமமாக எல்லார் மீதும் நடவெடிக்கை எடுக்க கடமைப்பட்டுள்ளனர். வேலியில் வைத்த வாசலை திருமதி ஜெயந்தி இந்திரகுமாரை அடைக்க சொன்ன அதிகாரி உங்கள் இணைப்பாளர் முதற் கொண்டு மற்றவர் வளவுமூலம் போய்வர வைத்த வாசல்களை கண்ணுக்கெட்டும் தூரம்வரை மூட உத்தரவிட்டிருக்க கடமைப்பட்டார். அவரோ உங்கள் முதுசத்திற்கு ஆசைப்படுவதுபோல உங்கள் வழியில் ஏற்ற தாழ்வு காட்டுகிறார். இதுவும் சாதி மூலம் முடிவு சொல்வது போலத்தான். உங்களை சாரந்தவர்கள் உயர்ந்த சாதி மற்றவர்கள் குறைந்த சாதி போல.

காலம் மூலம் உயர்வு தாழ்வு கணிப்பது பிள்ளையார் வழி. அதில் பெற்றார் / உயர் அதிகாரி சொல்வதே சட்டம். . இடத்தை வைத்து சரி-பிழை/லாப-நஷ்டம் / இன்ப-துன்பம் / பலன்-உழைப்பு பிரிப்பது ஜனனாயக முறை – முருகனின் வழி. அதுவே தேடிய தேட்டம் பகிரும் வழியும். திருமணமாகும்போது இன்னொரு கலாச்சாரம் வருவதால் இம்முறை திருமணத்திற்கு பின் சேரும் சொத்தை பகிர்வதற்கு பாவிக்கப்படுகின்றது. குடும்பமாகையால் கணக்குப்பார்க்காமல் சமமாக பகிரப்படுகிறது. அது போலவே பொது நிர்வாகமும். அதேபோல்தான் Australia போன்ற புதுக்குடியிருப்புகளிலும். தங்களுக்கும் பிரதேச சபை அதிகாரிகளுக்கும் துணைவியும் புதுக்குடியிருப்பே என்பது எனது முடிவு.

ஒரு தலைமுறையில் நாம் சட்டமூலம் போய் அதற்கும் அப்பால் உண்மைப்படி நடந்தால் அந்த பாதை அடுத்த தலைமுறைக்கு அந்த சமூகத்தின் பொது விதிமுறையாகிறது. எனது குரு சொல்வார் 'My Life is My Message' என்று. எனது அமைப்பு துணைவிக்கு தேவையான அந்த அமைப்பை காட்டுகிறது. வழங்குபவர் கொடுக்கும் வளத்திற்கு சமமாக பெறுபவர் நன்றி காட்டினால்தான் அவர்கள் இணைந்து பொதுவாகி – பகிரப் பிரித்தால் சமமாகி ஜனனாயக வழிப்படி வாழலாம். நன்றி நம்பிக்கையின் வித்து. வழங்குபவர் வழங்கும் வளத்தின் பெறுமதியைவிட பெறுனரின் நன்றி கூடுதலாக இருந்தால் பெறுனர்தான் முன்னின்று சந்தர்ப்பம் அளிக்கிறார் வழங்குபவருக்கு தனது கொடையை உலகத்திற்கு அறிவிப்பதற்கு. நன்றி குறைவாக இருந்தால் வழங்குபவருக்கு பெறுபவர் மீது இயற்கையான அதிகாரம் உண்டு. பெற்றாருக்கு சிறு பிள்ளைகள்மீது உள்ளதுபோல. உயர்ந்தவர் பொறுப்பெடுக்குமளவிற்கு இளையவர் நன்றியாக இருக்கும்போது உறவு முழுமையடைந்து சொந்தமாகிறது. முழுமையானதை பகிர்ந்தால் ஒவ்வொரு பங்கும் அந்த முழுமையின் தன்மையை கொண்டிருக்கும் - எம் ஒவ்வொருவருள்ளும் கடவுள் இருப்பது போல. இதற்கு பொது அமைப்புகளில் நன்றி இருக்கா இல்லையா என்று ஆராயாமல் சமமான அமைப்பை காட்டும்படி அந்தஸ்த்து அளிக்கப்பட வேண்டும். நன்றியால் மரியாதை காட்டுபவர் அந்த உறவை உயர்த்தி பின் பகிரும்போது அந்த ஒவ்வொரு பகுதியும் மரியாதை கொடுக்காமல் பகிர்வதைவிட கூடிய பெறுமதி கொண்டுள்ளது. நாம் பரந்த உலகுடன் உறவு கொள்ள இந்த உயரமான பெறுமதி தேவை.

நாம் காணி நன்கொடை கொடுத்ததற்கு சமமாக யார் நன்றி உணர்வு கொண்டு அவர்கள் எமக்கு கொடுக்கும் அந்தஸ்த்தின் மூலம் அதை உறுதிப்படுத்துகிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்த உண்மையின் அடிப்படையில் அமைந்திருக்கும் அமைப்பு நன்மை அளிக்கும். யாரெல்லாம் நன்றி இல்லாமல் அல்லாது குறைந்த நன்றி கொண்டு நடகிறார்களோ அவர்கள் அந்த அளவிற்கு நன்கொடையின் வளத்தையும் அதனுடன் வரும் சக்தியையும் இழக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் உங்களுக்கு அருகில் உள்ளவர்களும் துணைவியில் நம்பிக்கை இல்லாதவர்களும். நன்கொடையை நன்றி இல்லாவிட்டால் திரும்ப எடுக்க இலங்கை சட்டத்தில் இடமுள்ளது என்று அறிந்து எமது கலாச்சாரத்தின் மேன்மையை எண்ணி வியந்தேன். எழுத்தில் இது இன்னமும் திருப்பப்படாவிட்டாலும் நடத்தையால் உண்மையிலேயே நன்றி இல்லாதவர்கள் ஆனால் அதை வைத்து அதிகாரம் செலுத்துபவர்களும் பலன் அனுபவிப்பவரகளும் இழந்து விட்டார்கள். நாமும் மனத்தால் அந்த அளவிற்கு அதை திருப்பி எடுத்துவிட்டோம். அதுவே உண்மை சொல்லும் நீதி. வேறு ஒரு நீதியும் அதை விட உயர்ந்ததல்ல. அதுவே அடுத்த தலை முறைகளுக்கும் உலகளவிலிருந்து துணைவிக்கு வளங்களை கொண்டுவரும். அதை ஒழுங்கு முறையாக பாவிக்க வசதிப்படுத்துவது உங்களதும் கடமை.

மதில் உயரப்போட்டது உங்கள் உத்தியோகத்தர் காட்டிய வழிப்படியே. நீங்கள் எமது எல்லையில் வேலி போட்டபோது அது எமது பக்கத்திலிருந்து வரும் இன்னலைத் தடுக்க உங்ளுக்கு பாதுகாப்பிற்காக போட்ட அமைப்பை காட்டுகிறது. உங்கள் Gate கிட்டத்தட்ட அதே உயரம் தானே. பாதுகாப்பு தேவையில்லையென்றால் பதிவான Gate போட்டிருப்பீர்கள். மேலும் துணைவியைச் சார்ந்த உங்கள் இணைப்பாளர் பல தடவை கூறினார் மதில் போடப்போவதாக. எதற்கு என்று கேட்டதற்கு பாதுகாப்பிற்கு என்றார். ஒருத்தரும் வசிக்காத அந்த கட்டிடத்திற்கு எவ்வளவு பாதுகாப்பு தேவையோ அதைவிட கூடிய பாதுகாப்பு அங்கிருக்கும் மனித வளத்திற்கு தேவை. ஏனென்றால் பொருள் வளத்தைவிட மனிதவளம் உயர்ந்தது. அதிலும் உயர்ந்தது ஞானம். கூடிய அந்தஸ்து உள்ள பொருள் வளத்திற்கும் மனிதவளத்திற்கும் கூடிய பாதுகாப்பு தேவை. ஆகவே நீங்கள் எவ்வளவு உயரத்தில் மதில் போட நினைத்தீர்களோ அதைவிட பலமடங்கு பெறுமதியானஎமது பொருள்வளத்தை

பாதுகாக்குமளவிற்கு நாம் நடவடிக்கை எடுக்க எமக்கு உரிமை உண்டு. அல்லது கட்டிடம் அமைக்கும்போது உங்கள் இணைப்பாளர் அமைப்பை மாற்றி இருக்கவேண்டும். அப்பொழுது கட்டியவரது திறமையை மதித்திருந்தால் வேலியும் படலையும் போடமுதல் அவரது ஆலோசனையையும் கேட்டிருக்க வேண்டும் – பிள்ளையார் வழியில். நீங்களே தனியாக எல்லா முடிவுகளையும் எடுத்தீர்கள். விளைவு உங்களுக்கே. தினை விதைத்திருந்தால் தினை அறுக்கலாம். முருகனின் வழிப்படி அவதானித்து அங்கிருக்கும் பாதுகாப்பு Risk ஐ கணித்து அதே நேரத்தில் எம்மில் நம்பிக்கை காட்டியவர்களது பாதையை வசதிப்படுத்தியுமே அமைத்திருக்கிறோம். கிணற்றில் தண்ணீர் அள்ள வருபவர்களுக்கும் – எங்கள் பக்கத்திலிருந்து Privacy வசதிப்படுத்தி - அவர்களிடமிருந்து எங்களுக்கும் Privacy வசதிப்படுத்தி - மதில் கட்டியுள்ளோம். Gate - அது உண்மைப்படி இன்னும் எமது காணி என்று உறுதிப்படுத்துகிறது. மேலும் எமது நன்கொடை சட்டப்படி அது ஒரு நீள் பாதை நிலமென்று சொல்கிறது. ஆகவே பொது பாதைக்கும் மற்ற துண்டிற்கும் சட்டப்படி வித்தியாசமில்லை. உங்கள் அலுவலகம்தான் பாதையின் நடுவில் கட்டிடம் அமைத்து உள்ளது. மேலும் நாம் பொது மக்களுக்காக அமைத்த தண்ணீர் வசதியை அவர்கள் அணுக முடியாமல் Gate போட்டு மூடி வைத்து அதை தனியார் சொத்து மாதிரி பாவிக்கிறீர்கள். அநேகமாக அந்த Gate மூடியே இருக்கிறது. மனித வளம் இல்லாத அதற்கும் உயர்ந்த பொது ஞானம் இல்லாத கட்டிடம் ஒரு ஜடமே. எமது நன்கொடையின் சக்தியாக /பெறுமதியாக / அத்தாட்சியாக இல்லாவிடடால் அந்தக்கட்டிடத்தில் பெரும்பகுதி ஜடமே. நன்கொடை அளித்த எனக்கு அது உயர் மதிப்புள்ள முதுசம். சமமாக தேடிய தேட்டமாக பங்கிட நாமும் நீங்களும் சம உரிமையுடன் இன்னும் வாழவில்லை.

இப்படிக்கு

*GLParamasivam*

Gaja Lakshmi Paramasivam

பிரதி: Mr. A Arumainayagam Government Agent . Northern Province

தலைவர் / செயலாளர்; வலி-மேற்கு பிரதேச சபை; சுழிபுரம்

திரு சிவகுமார்; விதாணை; துணைவி-சங்கரத்தை

திரு கோகுலன் - அபிவிருத்தி உத்தியோகஸ்தர் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம்

திருமதி சரோஜா மருதலிங்கம் - இணைப்பாளர் துணைவி-சங்கரத்தை

Mrs Ponmalar Rajeswaran – Director – INSGD

Ms Rani Ratnadevi Karthigesan Sinnathamby

Mr. Sam Hensman

Mr. P. Jeevarasa – Thunaivi Coordinator – Australian Tamil Management Service

Mr. Pushparasa – Building Contractor – Thunaivi

Mrs. Jayanthi Indirakumar – Thunaivi Resident

Mr. & Mrs. David George – AKA - Robin & Pavan - Thunaivi Residents

Mr & Mrs. Aiyathurai - Thunaivi Residents

Mr. & Mrs. Shanmugalingam - - Thunaivi Residents

அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமிக் கோயில் தலைவர்